Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம்10


# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (4-9-65) இதழ் 204

விசுவாவசு ஆவணி 19 ஜ: அவ் பிறை 7 சனிக்கிழமை




## அதே விலைதான்!

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள வியாபாரிமார் சாமான்களுக்கு விலை குறைக்கப்பட்டும், இன்னும் தங்கள் பழைய விலைக்கே சாமான்களை விற்கிறார்கள் என அறியப்படுகிறது.

மேலும் விலைப்பட்டியலில் உள்ள விலைக்குச் சாமான்களைக் கேட்டால் கொடுக்கவும் மறுப்பதாக அநேக புகார்கள் வந்திருப்பதாக அறியப்படுகிறது.

# பாக். குண்டு வீச்சுக்கு 50 பேர் பலி

## 2 பாகிஸ்தான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

### காஷ்மீரில் சண்டை உக்கிரம்

புதுடில்லி, செப். 3

இன்று காலை அக்னூர்-சாம் பகுதியில் ஏற்பட்ட ஒரு விமானச் சண்டையின் போது பாகிஸ்தான் விமானப் படையைச் சேர்ந்த இரு அமெரிக்க ஸாப்ரி ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

அதே சமயம் இப்பகுதியிலுள்ள ஜௌரியான் கிராமத்தில் பாகிஸ்தானிய விமானங்கள் குண்டுமாரி பொழிந்ததால் அங்கு பள்ளிவாசலில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த 50 பேர் கொல்லப்பட்டனர் என்றும், ஒரு பள்ளிவாசல் தரை மட்டமாக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தியப் பிராந்தியத்துக்குயரே பறந்த எப் 104 பாகிஸ்தானிய விமானங்களை தடுக்கும்படி இந்திய விமானப் படைக்கு உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய விமானங்கள் உயரே சென்று நடுவானில் ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்தியன. சுடப்பட்ட விமானம் வெடித்து பூமியில் வீழ்ந்தது. மற்றோர் பாகிஸ்தானிய விமானம் தரையிலிருந்து சுடப்பட்ட பீரங்கிக் குண்டினால் அடிபட்டு வீழ்ந்தது.

ஜௌரியான் கிராமத்தில் பாகிஸ்தான் விமானப்படையைச்சேர்ந்த ஸாப்ரி ஜெட் விமானங்கள் குண்டு வீசியதில் பள்ளிவாசலில் தொழுகைநடத்திய 50 பேர் கொல்லப்பட்டனர். பள்ளிவாசல் தரைமட்டமாயிற்று.

தங்களுடன் இக்கிராமவாசிகள் ஒத்துழைக்க மறுத்ததால் பழிவாங்கு முகமாகவே இத்தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

காஷ்மீர் பற்றிய பாரதத்தின் கருத்தை எடுத்துரைக்கும் பொருட்டு ஐ. நா.வி லுள்ள இந்திய நிரந்தரப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி பாதுகாப்பு சபையின் பல உறுப்பினர்களையும் சந்தித்துப்பேசினார்.

சமாதானத்தைக் குலைக்கும் எதையும் செய்யவேண்டாம் என ஆஸ்திரேலியா, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விண்ணப்பித்திருக்கிறது.

பாகிஸ்தானின் செயல் காஷ்மீர் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தையும், காஷ்மீர் எல்லைக்கோட்டையும் மீறியிருப்பதாக பிரதமர் சாஸ்திரி தெரிவித்தார்.

## சமூக குறைபாடுகளை நீக்க ஆலோசனை மகாநாடு

### இன்று காலை நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு வாரத்தின்போது எடுக்கப்படவேண்டிய ஆக்க நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பதற்காக இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா, ஒரு மகாநாட்டைக் கூட்டுகிறார்.

இம்மகாநாட்டில் வட பகுதி எம். பி.க்களும், காரியாதிகாரிகளும் கலந்து கொள்வார்கள். சமூகக் குறைபாடுகள் ஒழிப்புவார இயக்க நிர்வாகிகள் அமைச்சர்களுக்கு விடுத்த கோரிக்கையின் விளைவாகவே இம் மகாநாடு நடைபெறுகின்றது.

கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஆகியோரும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரம், இம்மாதம் 19ந் தேதி முதல் 25ந் தேதி வரை அனுஷ்டிக்கப்படும். வடபகுதி எங்கும் சமூக சீர்திருத்த இயக்கங்களும், பிரசாரக் கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன.

## மாணவ விவசாய பயிற்சி பிரதமர் ஆரம்பித்துவைத்தார்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பாடசாலை மாணவர்களுக்கு விவசாயத்துறையில் ஊக்கமளிக்குமுகமாக உருவாக்கப்பட்டுள்ள விவசாயப் பயிற்சி இயக்கத்தை பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இன்று காலை 8 மணியளவில் இம்புல்கொடையில் ஆரம்பித்து வைத்தார்.

பிரதமர் இங்குள்ள ஒரு வயலில் களை பிடுங்கி இப் பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். பிரதமர் வயலில் இறங்கி களை பிடுங்கியதைத் தொடர்ந்து பலரும் அதில் ஈடுபடத் தொடங்கினர். இந்தப் பயிற்சியில் சுமார் 1200 மாணவர்கள் பங்கு பற்றினர்.

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை, மற்றும் கல்வி, காணி அபிவிருத்தி இலாகாக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்,

'நாம் எதிர்நோக்கியிருக்கும் இன்றைய உணவு நிலைமை பாரதூரமாயினும் எமது வாலிபர்களினதும் ஏனைய பகுதியினரதும் ஒத்துழைப்பும் சக்தியும் எமக்குக் கிடைக்குமாயின் இன்றைய நிலைமை அவ்வளவு பாரதூரமானதாக இருக்கமாட்டாது' என பிரதமர் இதுசம்பந்தமாக வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

## நட்புறவுடன் தனித்தியங்கும்

யாழ்ப்பாணம் சனி

'அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கம் ஏனைய பிராமண சங்கங்களுடன் நட்புறவுடன் தனித்தே இயங்கவேண்டும்' என்னும் தீர்மானம் சிவப்பிராமண சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிவப்பிராமண சங்கத்தை அகில பிராமண குரு சேவா சங்கத்துடன் இணைப்பது பற்றி விரிவாக ஆராய்ந்த பின் நட்புறவுடன் தனித்தே இயங்குவதென முடிவு செய்யப்பட்டது.

## இன்று

செல்வச்சந்நிதி 10-ம் திருவிழா. இசையரங்கு: வயலின் திரு. எஸ். வைத்தீஸ்வரஐயர், மிருதங்கம்: திரு, எம். என். செல்லத்துரை. கதிரமலைக்கந்தன் என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம்-ஸ்ரீ எஸ். விஞசித்தம்பி.

ஃ ஃ ஃ

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார்கோயிலில்இன்று இசைப்புலவர் திரு. சி.செல்லத்துரை திருமுறை இசை விருந்து அளிப்பார். பின்னர் டாக்டர் க சிவஞானரத்தினம் இசைப்புலவரைப் பாராட்டிக் கௌரவிப்பார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோயிலில் இன்று [illegible] டிதை செல்வி [illegible] அப்பாக்குட்டி 'மாணிக்க [illegible] என்ற தலைப்பில் [illegible] சொற்பொழிவாற்றுவார்.

'ஈழநாடு'

## சூறாவளி மாத உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், சனி

(ஈழநாடு) சூறாவளி மாத உதவித் திட்டத்துக்கான தமது புரட்டாதி மாதப் பண்மான ரூ. 25 ஐ நெல்லியடியைச் சேர்ந்த ஓர்அன்பர் காசோலை மூலம் அனுப்பியுள்ளார்.

## தேசியசுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி

நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 53-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

01 Q 0023—ரூபா 56,520

இரண்டாவது பரிசு

12 W 0730—ரூபா 22,608

மூன்றாவது பரிசு

09 F 0161 — ரூபா 5,652

(6-ம் பக்கம் பார்க்க)

## 'வெண்காய உற்பத்தியை உள்ளூரில் பெருக்குக'

### விவசாய அதிகாரி வேண்டுகோள்

வவனியா, வெள்ளி

''நமது நாட்டிலிருந்து இன்று வெளி நாட்டுக்குப் பல லட்சம் ரூபாய் பம்பாய் வெங்காயத்திற்காகச் செலவிடுவது யாவரும் அறிந்த உண்மை. பம்பாய் வெங்காயத்தை வவனியா மாவட்டத்தில் உற்பத்தி செய்து நாம் பணத்தை மிச்சப்படுத்தலாம். இவ்விடத்தில் பம்பாய் வெங்காயத்தைப் பார்க்கும்பொழுது இது இலங்கையில் புதிய திருப்பத்தை உண்டாக்கிவிட்டது என எண்ணத் தோன்றுகிறது. இவ்விடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பம்பாய் வெங்காயம் தரத்தில் கூடியதும், பெரியதும் ஆக இருப்பதைக் கண்டு நான் சந்தோஷம் அடைகின்றேன். இப்படித் திறமையாக இருப்பது விவசாய இலாகாவில் கடமையாற்றும் உத்தியோகஸ்தரின் திறமைதான். இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வாறு நேற்று வவனியா களஞ்சிய அறைக்கு அருகாமையில் நடைபெற்ற பம்பாய் வெங்காய கொள்வனவு விழாவுக்குப் பிரதமவிருந்தினராகச் சமுகமளித்து உரையாற்றிய விவசாய உதவி அதிபர் டாக்டர் அபயரத்தின கூறினார். இவ்விழா வவனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. நடேசன் தலைமையில் நடைபெற்றது.

திரு. அபயரத்தின வவனியா கிருஷிகப் போதனாசிரியர் பகுதியில் இவ்வருடம் கூடுதலான பம்பாய் வெண்காயம் செய்யப்பட்டதையும் பாராட்டி, விவசாயிகள் எல்லோரும் ஒற்றுமையுடன் நமது நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க முன்வரவேண்டும். நாட்டின் முன்னேற்றமும், நாட்டின் அபிவிருத்தியும் விவசாயிகளின் கையில்தான் தங்கியுள்ளது. ஒரு நாட்டை முன்னேற்ற நாட்டில் உற்பத்தி கூட்டவேண்டும். ஆகையால் சகலரும் பம்பாய் வெண்காயம், செத்தல்மிளகாய் போன்றவையை உற்பத்தி செய்வதில் முன்வரவேண்டும் என்றார்.

திருவாளர்கள் அந்தோனிப்பிள்ளை, ஞானவாசகம் ஆகியோர் தாங்கள் உற்பத்தி செய்த பம்பாய் வெண்காய அனுபவங்கள் பற்றிப் பேசினார்கள். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் சகலருக்கும் நன்றி கூறினார்.

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518. தந்தி: 'யப்பான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எவன் என்னை முறைபிறழாத பத்தியோகத்தால் சேவிக்கிருனே, அவனும் இக் குணங்களை எளிதில் கடந்துசென்று, பிரமம் ஆவதற்குத் தகுதியுடையவனுகின்ருன்.

—பகவத்கீதை

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 19 உ (4-9-65)

# காஷ்மீர் யுத்தம்

காஷ்மீர் கைகலப்பு ஒரு ஆசிய யுத்தத்திற்கு அல்லது உலக யுத்தத்திற்கு மூலகாரணமாக விளங்கக்கூடுமா என்ற கேள்வி இப்போது அடிபட்டுவருகிறது. தற்போதுகிடைக்கும் செய்திகளிலிருந்து இந்திய, பாகிஸ்தான் படைகள் அங்கு டாங்கிகள், விமானங்கள் சகிதமாக மோதிக்கொண்டிருப்பதை புலப்படுத்திவருகின்றன.

இந்த நூற்ருண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட யுத்தங்கள் எல்லாவற்றிற்கும் முக்கியமாக பால்கன் நாடுகளே காரணமாய் இருந்தன. 1914-ம் ஆண்டு ஆரம்பமான முதலாவது மகாயுத்தம் பால்கன் நாடான ஸேர்பியாவில் தொடங்கியது என்பது ஞாபகமிருக்கும். 1939-ம் ஆண்டு ஆரம்பமான இரண்டாவது மகாயுத்தம் செக்கோஸ்லோவேகிய பிரச்னையால் தோன்றியது.

இப்போது இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே தொடங்கியுள்ள கைகலப்பு ஒரு யுத்தமா, அல்லது பெரும் யுத்தம் ஒன்றின் தொடக்கமா என்ற கவலை உலகத்தின் பலநாடுகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

காஷ்மீர் கைகலப்பில் அமெரிக்க பேட்டன் டாங்கிகளுடன்அமெரிக்க ஸெப்ரி ஜெட் விமானங்களையும் பாகிஸ்தான் உபயோகித்து வருவதாகக் கூறப்படுகிறது. இதுமேற்கத்திய நாடுகளின் பிழையான ராஜதந்திரத்தின் ஒரு விளைவு என்றே கருத வேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கு 4 நீர்மூழ்கிகளை ரஷ்யா கொடுப்பதைப் பற்றி அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் பத்திரிகைகளும் இதர வட்டாரங்களும் ஆட்சேபனைகளையும் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்திருக்கின்றன. ஆனுல் ஜனநாயகத்தைக் காப்பதாகக் கூறும்அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு பெருமளவு ஆயுத சாதனங்களையும் ஜெட் விமானங்களையும் வழங்கியிருப்பதிலிருந்து அது ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிறதா அல்லது, இந்தியா-பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடுகின்றதா என்ற விஷயத்தைக்கவலையுடன் ஆராய வேண்டியுள்ளது. இவ்விஷயத்தில் மேற்கு நாடுகளின் ராஜதந்திரம் பிழையான வழியில் சென்றிருப்பதாகவே கொள்ள வேண்டும்.

பாகிஸ்தான், சீனுவின் தூண்டுதலுக்கு இணங்கியே இந்தியாவுடன் மோதுவதற்கு முன்வந்திருப்பதாக வதந்திகள் கூறுகின்றன. சீனுவின் முன்னணி ராஜதந்திரிகளில் ஒருவரான திரு. கோயிங், சென்ற 20ம் திகதி முதல் கராச்சியில் இரகசியமாகத் தங்கியிருப்பது குறித்து கொழும்புப் பத்திரிகைகள் பிரஸ்தாபித்திடுக்கின்றன. அவரது சதியாலோசனையை தொடர்ந்தே பாகிஸ்தான் காஷ்மீரில் ஊடுருவலையும், யுத்த முறையையும் கையாண்டிருப்பதாக சில வட்டாரங்கள் கூறுகின்றன. இது உண்மையானுல் விபரீதமானது.

சமீபத்தில் சுதந்திரமடைந்த இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஜனநாயக நாடுகள் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிபுரியுமெனக் காத்திருந்ததற்குப் பதிலாக, யுத்த சாதனங்களை அளிப்பதையே அவைகள் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இதனுல் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் முன்னேற்றமும் பல ஆண்டுகள் பின்போடப்பட்டு விடும் என்பதே நம் கருத்து.

இந்தக் கைகலப்பு பெருகுமானுல் இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளுமே அழியும். ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டும், இதர ஐ. நா. பிரமுகர்களும் காஷ்மீரில் யுத்தத்தை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்திருக்கிருர்கள். இப்பிரயத்தனங்கள் கைகூடி, காஷ்மீர் யுத்தம் உடன் நிறுத்தப்படவேண்டுமெனச் சமாதானத்தை விரும்பும் சகல நாடுகளும், மனிதர்களும் பிரார்த்திக்கிருர்கள்.

## அடிமை வியாபாரம்?

பதுளை, வெள்ளி

பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் வறியவர்களின் பிள்ளைகள் திட்டமிட்ட ஒரு கோஷ்டியினரால் கடத்தப்பட்டு பதுளைச் சுற்றுப்புறங்களிலுள்ள இடங்களில் வேலைக்காரர்களாக விடப்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில பிள்ளைகள் காணுமல் பேரய் விட்டதைத் தொடர்ந்து காணுமல் போன பிள்ளைகளின் பெற்ருேர்கள் பெரிதும் கவலைகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

சில நாட்களுக்குள் ஆஸ்பத்திரியிலிருந்து காணுமல் போனதாகக் கூறப்பட்ட ஒரு பிள்ளை ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவரது வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டதாக பொலிசார் விசாரணை செய்தபோது தெரியவந்தது. இவ்வித மோசடிகள் பற்றி பொலிசார் தற்பொழுது தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

## உற்சவம் ஆரம்பம்

காங்கேசன்துறை, வெள்ளி

தையிட்டி கணையவிற் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவம் 10-ந் திகதி நடைபெறும் தேர், தீர்த்த உற்சவத்துடன் பூர்த்தியடையும்.

## விநாயக வழிபாட்டின் மகத்துவம்

காங்கேசன்துறை, வெள்ளி

''சைவமக்கள் எல்லோராலும் இலகுவில் மேற்கொள்ளப்படும் விநாயக வழிபாடு நமது வாழ்க்கையை நல்ல வழியில் இட்டுச்செல்லக்கூடியது. மக்கள் மனத்தில் அறியாமை என்னும் இருளைப்போக்கி ஞான ஒளியை விநாயக வழிபாடு தருகிறது'' என்று பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கசாத்துறை ஆனந்தப்பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற விநாயக சதுர்த்திவிழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: மொழியையும், சமயத்தையும் பாதுகாத்த பெருமை பெண்குலத்துக்கு உண்டு. பெண்கள் தமது குழந்தைகள் உள்ளத்தில் சமய உணர்வை ஏற்படுத்த வேண்டும். சமயத்தில் நம்பிக்கைகொண்ட சமுதாயத்தைஉருவாக்கும் பெரும் பொறுப்பு பெண்களைச் சேர்ந்தது. அவர்கள் தமக்குரிய கடமைகளைச் சரிவரச்செய்ய விநாயகர் வழிபாடு வேண்டும். வாழ்வளிக்கும் ஆனந்த விநாயகப் பெருமான் பெருமையைக் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல இத்தகைய விழாக்கள் உதவும். இப்பகுதி மக்கள் ஆனந்தவிநாயகப்பெருமான் மீது கொண்டுள்ள பேரபிமானத்தை அனைவரும் உணரக்கூடியதாக உள்ளது.''

திரு. பாரதிநேசன் பேசுகையில் கசாத்துறை ஆனந்தப்பிள்ளையார் கோவிலின் சரித்திரப் பெருமை தமிழர்களுக்கே பெருமையளிக்கக் கூடியதென்றும், 15 நூற்ருண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட இந்த ஆலயம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலுடன் சரித்திரத் தொடர்புள்ளதென்றும் கூறினுர்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை 'விநாயக சதுர்த்தி' என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்தினுர்.

## கூ.மொ.வி. கடைகளை மூடுவதற்கு ஆட்சேபம்

குரும்பசிட்டி, வெள்ளி

சுன்னுகம், உடுவில் ஆகிய இரு இடங்களிலுமுள்ள கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனத்தின் சில்லறைக் கடைகளை இவ்வருட இறுதியில்மூடிவிடுவதென்று செய்யப்பட்ட முடிவை ஆட்சேபித்து வர்த்தகக் கூட்டுறவு அமைச்சர் திரு. எம். வி. பி. பீரிஸிடம் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் முறையீடுசெய்யவிருக்கிருர். இப்பகுதிகளில உள்ள உள்ளூராட்சி மன்றங்களும், பொதுஸ்தாபனங்களும் குறிப்பாக, சுன்னுகம் பட்டினசபையும் இதுகுறித்து பலத்த கண்டனம் தெரிவித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு ஆட்சேப மனுக்கள் அனுப்பியுள்ளன. அண்மையில் நியமிக்கப்பட்ட கமிஷன் ஒன்று நாடெங்கிலுமுள்ள கூ. மொ. வி. நிலைய சில்லறைக் கடைகளை ஆராய்ந்து அவற்றில் 98 சில்லறைக் கடைகளை மூடிவைக்கும்படி உத்தரவிட்டது.

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்

கொழும்பு, சனி

ஐந்து மாநகரசபைகள், 24 நகர சபைகள், 44 கிராமசபைகள் ஆகிவற்றின் தேர்தல்கள் டிசம்பர் மாதம் நடைபெறும்.

இவைகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் தேர்தல் இலாகா சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறது.

## உள்ளூர் செய்திகள்

### புதிய கட்டடம் மூடப்பட்டது

கொஸ்லாந்தை நகரில் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலைய கிளை நிறுவுவதற்கு கட்டப்பட்ட புதிய கட்டடம் இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. மேற்படி கட்டட உட்புறத்தில் பொருத்தப்பட்டிருந்த உபகரணங்களும் அப்புறப்படுத்தப்பட்டன.

### சங்கீத கதாப்பிரசங்கம்

நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்க ஆதரவில் 4-ம் திகதி சனிக்கிழமை கதிரேசன் கல்லூரியில் பிரம்மஸ்ரீ மணிபாகவதரின் சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,

ஃ ஃ ஃ

### 500 ரூபா அபராதம்

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். சோமபாலா என்பவர், கொத்தமல்லி கால் ருத்தலின் கட்டுப்பாட்டுவிலை பதின்மூன்று சதமாக இருக்கையில் இரண்டு சதம் லாபம் வைத்து 15 சதமாக விற்றதையிட்டு மாத்தறை மாவட்ட கட்டுப்பாட்டு அதிகாரியினுல் தாக்கல்செய்யப்பட்ட வழக்கில், மாஜிஸ்டிரேட் 500 ரூபா அபராதம் விதித்தார்,

### வீட்டுப் பிரச்னை

ஈரியகொல்லைத் தோட்டத்தைச் சேர்ந்த பத்து ஏக்கர் காணியை வாங்கி, காணியில்லாதவருக்கு விநியோகிப்பதன் மூலம் இங்குள்ள வீட்டுப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதென எட்டியாந்தோட்டைப் பட்டின சபை முடிவுசெய்துள்ளது.

ஃ ஃ ஃ

### வீசப்பட்ட கருவாடு

மாத்தறை மாவட்டத்திலுள்ள சி. டபிள்யு, ஈ. கடையொன்றில் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படாமல் பல மாதகாலமாக வைக்கப்பட்டிருந்த ஏழு மூடை கருவாடு நில்வல ஆற்றில் வீசப்பட்டதாகத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

### வாலிபன் தற்கொலை

இருபத்தாறு வயதான எச். ஜி. ஜின்அப்பு என்ற வாலிபன் தான் காதலித்த ஒரு பெண்ணின் வீட்டிலேயேநஞ்சுண்டு தற்கொலை செய்துகொண்டார். மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

பரவியுள்ள சீமைக்கிறுவை (கிளிசிறியா) இலைகளைக் குப்பையில் சேர்க்காமல் புறக்கணிப்பதுண்டு. இந்த மரத்தின் இலைகளை மட்டும் ஒடித்து பின்னேரங்களில் காயவிட்டு பின்னர் கூட்டெருவுடன் சேர்த்துக் கொள்ளுவதில் ஒரு தீங்குமில்லை.

சென்ற வருடம் வேளாண்மை இல்லாதபடியினுல் சென்ற வருடத்துப் பசளை மண்ணில் இருக்கும்தானே என்று நினைத்து சிலர் இவ்வருடம் பசளையிடாமல் விட்டுவிடக்கூடும். இதில் ஓரளவு உண்மை இருந்தபோதிலும் இவ்வருடமும் பசளை போடுவதால் விளைச்சல் கூடுமேயன்றி குறைந்துவிடுமா? எவ்வளவுக்கெவ்வளவு நிலத்துக்கு பசளை ஊட்டுகிருேமோ அவ்வளவுக்கவ்வளவு நிலம் பண்பட்டு விளைவு அதிகரிக்கும்.

— கலப்பை

## களத்து மேடு

யாழ்ப்பாணக்குடாநாட்டில் ஏக்கர் கணக்கில் நெற்பயிர் செய்வோரின்தொகை மிகக் குறைவு. பெரும்பான்மையோர் பரப்புக் கணக்கில் கமம் செய்யும் சிறு கமக்காரர். இதனுல் ஒரு நன்மை என்னவென்ருல் இவர்கள் பெருமளவில் சீமைப்பசளை என்று சொல்லப்படும் செயற்கை உரத்தை அதிகமாக உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. தங்களுக்குத் தேவையான பசளையைத் தங்கள் தங்கள் வீடுவளவுகளிலேயே தயாரித்துக் கொள்ளலாம்.

நெல்வயல்களில் பசளையிடுதல் இப்பொழுது மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. ஆவணி 15 கழிந்துவிட்டபோதிலும் விதைப்பு வேலைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை. சிலர் நேற்று நாள்விதைப்பு மட்டும் செய்திருக்கிருர்கள்.

வண்டில் வண்டிலாக வயலுக்கு ஏற்றப்படும் பசளையைப் பார்த்தால் சில கமக்காரர் இன்றும் பழைய கால முறைகளையே பின்பற்றிக் கொண்டு வருகிருர்களென்று தெரியவருகிறது. தனிய பழம் பனையோலையை தாழ்ப்பதாலும் வளவுகளில் சேரும் பூவரசஞ் சருகைத் தாழ்ப்பதாலும் வயல்களில் பசளைச் சத்து பரவமாட்டாது. தனிய மாட்டெருவும் சிறந்த பசளையாகமாட்டாது.

வீட்டுக்குப்பை, எரு, பச்சிலைக் கழிவுகள், சாம்பல் முதலியன எல்லாம்சேர்ந்து உக்கின கூட்டுப்பசளைதான் நெல்வயல்களுக்கு மிகவும் சிறந்தது. கடைசி ஒரு மாடாவது எந்தக் கமக்காரன் வீட்டிலும் நிற்கும். பலர் ஆடுகளையும் வளர்ப்பார்கள். ஆடு, மாடுகளை இரவு நேரங்களில் அலைந்து திரியவிடாமல் அவற்றைக் கட்டையில் கட்டிவைத்து வளர்க்க வேண்டும். இரவில் அவை படுப்பதற்கு கழிக்கப்பட்ட வைக்கோல், புல்லு, குழை முதலியவற்றைப் பரப்பிவிட வேண்டும், மறுநாட் காலையில் அவற்றை சாணியோடும் மூத்திரத்தோடும் எடுத்து ஒரு மட்டமான மேடையில் குவிக்க வேண்டும். கோழிகள் கிளறிவிடாதபடி நாலடுகிலும் தென்னோலை அல்லது பனையோலையால் பாதுகாத்து வைக்க வேண்டும். மழை காலமாயிருந்தாலும் அதற்கு மேல்குடில் போட வேண்டியதில்லை. மழையின் உதவியால் அந்தக் கூட்டெரு உக்கிக்கட்டியாகும். மழை இல்லாத காலங்களில் அதிலுள்ள நீர்ப்பசுமை ஆவியாக மாறிப் போகாதபடி குப்பையைக் கிளறி சற்று உயரமானதாகக் குவிக்க வேண்டும். இந்தவிதமாகத் தயாராகும் கூட்டெரு, கஞ்சல் எது, வைக்கோல் எது, குழைஎது என்று தெரியாத வண்ணம் ஒன்று கலந்து அதுவே ஒரு தனி எருப் போல் இருக்கும். நெல்லை வளர்த்து புஷ்டியாக்கக் கூடிய ஜீவசத்துகளும் கிருமிகளை எதிர்க்கவல்ல சத்தும் இந்தப் பசளையில் கிடைக்கும்,

புளியமரத்தின்கீழ் உதிரும் சருகை சிலர் கூட்டிச் சேர்க்க சோம்பல்பட்டு அப்படியே விட்டுவிடுகிருர்கள். மாட்டெருவுக்கு இணையான பசளைச்சத்து புளியஞ்சருகில் இருக்கிறதென்பதை அறிந்தால் அவர்கள் அவ்விதம் செய்யமாட்டார்கள். வேறுசிலர் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது எங்கும்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் யுத்த கெடுபிடிகள்: காஷ்மீர், வியட்னும், மலேஸியா, பக்தூனிஸ்தான்

# சாம் பகுதியில் பாக். முன்னேற்றம்

# தடுக்கப்பட்டது

## அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்தது குறித்து வாஷிங்டன் விளக்கம் கோருகிறது

### காஷ்மீர்நெருக்கடிக்கு பாகிஸ்தான் காரணம்என யுதாண்ட் கருத்து?

புதுடில்லி, செப். 3

சாம் பகுதியில் பாகிஸ்தான் படைகளின் முன்னேற்றம் தடுத்துநிறுத்தப்பட்டுவிட்டதாகவும், இந்தியத் துருப்புக்கள் அங்கு கடுமையாகத் தாக்கியிருப்பதாயும் இங்கு அறிவிக்கப்பட்டது. இந்திய உளவு விமானங்கள் பாகிஸ்தான் நிலைகள் மீது பறந்த போது, பாகிஸ்தான் விமானப்படையைச் சேர்நத அமெரிக்க ஸப்ரி ஜெட் விமானங்கள் அவைகளைத் தாக்கியதாயும், ஆனல் துணைக்குச் சென்ற இந்திய விமானங்கள் அவைகளை பாகிஸ்தான் எல்லைக்குள் துரத்திவிட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

நேற்று குறைந்தளவு சண்டையே இப்பகுதியில் நடைபெற்றதாய் அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் நேற்றுப் பேசுகையில், சாம் பகுதியில் அவசியமான எதிர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாய்த் தெரிவித்தார். சிவில் பாதுகாப்புக்கு தேசீய கெடட் படையை உபயோகிப்பது பற்றி ஆராய்ந்துவருவதாயும் அவர் கூறினர்.

### மேற்கு வங்கத்தில்

மேற்கு வங்க முதல்வர் திரு. பி. ஸி. சென் நேற்று சிவில், ராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனைநடத்தினர். எல்லையில் அமைதிகாணப்படுவதாயும், இருந்தாலும் தமது அரசாங்கம் உஷாராய் இருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

### விளக்கம் தேவை

காஷ்மீரில் அமெரிக்க விமானங்களும், டாங்கிகளும் உபயோகிக்கப்பட்டிருப்பது குறித்து அமெரிக்கா பாகிஸ்தானிடம் தகவல் கேட்டிருக்கிறது. பாகிஸ்தானுக்கு அனுப்பப்படும் ராணுவ உதவியில் இதுவரை தடங்கல் இல்லை என அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினர்.

நேற்று அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் இந்திய, பாகிஸ்தான் ஸ்தானிகர்களைச் சந்தித்து தனித்தனியே பேச்சு நடத்தினர். போர்நிறுத்தம் செய்யுமாறு யுதாண்ட் விடுத்த வேண்டுகோளை தமது நாடு ஆதரிக்கிறதென்று அவர் அவர்களிடம் கூறினர்.

டில்லியிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. பிரீமன் இந்திய அரசாங்கத்திடம், தமது அரசாங்கத்தின் செய்தி ஒன்றைக் கையளித்திருக்கிருர். அதேசமயம் கனடா வெளிநாட்டு மந்திரி திரு. பால் மார்ட்டின் இரு நாட்டுத் தூதர்களையும் சந்தித்தார்.

### யுதாண்ட்

தனது கடிதத்திற்கு இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலுமிருந்து பதில் வரும்வரை அறிக்கை எதுவும் வெளியிடப்படமாட்டாதென யுதாண்ட் கூறியிருப்பதாகத் தெரிகிறது. யுதாண்ட் பாதுகாப்புச் சபை அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பியுள்ள கடிதங்களில் பாகிஸ்தான்தான் காஷ்மீர் நெருக்கடிகளுக்குக் காரணம் எனக் குறிப்பிட்டிருப்பதாக 'நியுயோர்க் ஹெரால்ட் டிரிபியூன்' பத்திரிகை கூறுகிறது. இந்தியாவின் குற்றச்சாட்டை ஏற்று பாகிஸ்தானை ஆக்கிரமிப்பாளர் என அறிவிக்கவேண்டும் என அமெரிக்க பொதுமக்கள் வற்புறுத்தி வருவதாக பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### முஸ்லிம் லீக்

இந்திய முஸ்லிம்லீக் தலைவர் திரு. முகம்மது இஸ்மாயில் விடுத்த அறிக்கையில் பாகிஸ்தான் அனுவசியமாக எல்லையைக் கடந்து வந்து ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பதாயும், முஸ்லிம் மக்கள் இதர மக்களுடன் சேர்ந்து இந்த ஆக்கிரமிப்பை எதிர்க்கவேண்டும் என்றும் கூறியிருக்கிருர்.

## அமெரிக்க யுத்தத்தைதிணித்தால் சரியான பதிலடி கொடுப்போம்

### சீனுவின் எச்சரிக்கை

பீகிங், செப். 3

சீனுமீது அமெரிக்கா யுத்தத்தைத் திணிக்குமானுல் சரியான பதிலடி கொடுக்கப்படும் என பீகிங் எச்சரிக்கை தெரிவித்திருக்கிறது.

அமெரிக்கா வியட்னுமில் முழு யுத்தம் ஒன்றை ஆரம்பித்தால் அங்குள்ள அமெரிக்கப் படைகளை சீனு அடியோடு நாசமாக்கிவிடுமென்றும், அமெரிக்காவின் பலம் வாய்ந்த விமான, கடற் படைகளுக்குச் சீனு ஒரு போதும் அஞ்சாது என்றும் அது மேலும கூறியுள்ளது.

சீனப் பிரதமர் சூ-என்-லாய் ஒரு வைபவத்தில் பேசியபோது, அமெரிக்கா தென் வியட்னுமிலிருந்து வாபஸ் பெறும்வரை 1954ம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்தத்தை அமுல் நடத்த முடியாது எனக் கூறியிருக்கிருர். வியட்னுமில் மேற்கு நாடுகளின் சமாதான யோசனை ஒரு போதும் வெற்றியடையாது என்றும் சூ கூறினர்.

ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் மலினேவ்ஸ்கி, வியட்னுமில் அமெரிக்கா காட்டுமிராண்டித்தனமான யுத்தத்தை நடத்துகிறது என்றும், வட வியட்னுமின் பாதுகாப்புக்கு அதுதொடர்ந்து உதவும் என்றும் கூறியிருக்கிருர்.

வட வியட்னும் தலைநகர் ஹானேயின் புறப்பகுதிகளில்ல் கடந்த இரு நாட்களாக அமெரிக்க விமானங்கள் பறந்து வருவதாய் ஹானேய் ரேடியோ அறிவித்தது.

## சபாநாயகர் மரணத்தினுல் அரசாங்கத்துக்கு தலையிடி

### பெரும்பான்மை பலம் 2 ஆககுறைவு

லண்டன், செப். 3

பிரிட்டிஷ் காமன்ஸ்சபையின் சபாநாயகரின் திடீர் மறைவினுல் தொழிற் கட்சி அரசாங்கத்திற்குப் பெரிய தலையிடி ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் பெரும்பான்மைப்பலம் இப்போது 2 ஆகக் குறைந்திருக்கிறது. 60 வயதான சபாநாயகர் லண்டன் வீதியொன்றில் மூர்ச்சையடைந்தார். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபின் அவர் மரணம் அடைந்தார்.

பிரதமர் வில்சன் இது சம்பந்தமாக கன்சர்வேட்டிவ் தலைவர் திரு. ஹீத்தையும், லிபரல் தலைவர் கிரிம்மொண்டையும் சந்திக்கவிருக்கிருர். எதிர்க் கட்சியைச் சேர்ந்த எவரும் சபாநாயகர் பதவிக்கு நிற்க விரும்பவில்லை என்றும், இதனுல் தங்கள் வாக்குப்பலம் குறையுமென்று அவைகள் கருதுவதாயும் கூறப்படுகிறது. தொழிற் கட்சியைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகரானுல் அரசாங்கத்தின் பெரும்பான்மைப்பலம் 1 ஆகக் குறையும்.

இரு உபதேர்தல்கள் வேறு நடைபெறவிருக்கின்றன.

## இந்தோனேஷிய விமானத் தாக்குதல்

கோலாலம்பூர், செப். 3

இந்தோனேஷியா, முதல் தடவையாக மலேஸியப் பிரதேசத்தின் மீது விமானங்களை உபயோகித்திருக்கிறது. ஸரவாவில் இரு அமெரிக்க ஜெட் விமானங்களை அது உபயோகித்து கிராமம் ஒன்றின்மீது யந்திரத் துப்பாக்கிகளால் சுட்டன என்றும் ஆனுல் சேதம் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

## பாகிஸ்தான் நிலைகளை பக்தூனியர் தாக்கினர்

காபூல், செப். 3

வஸிரிஸ்தானில் மூன்று பாகிஸ்தான் ராணுவ இலக்குகளை பக்தூன் தேசியவாதிகள் தாக்கி பலத்த சேதம் விளைவித்ததாய் காபூல் ரேடியோ அறிவித்தது.

பக்தூனியர்களின் பலம் வாய்ந்த பகுதியில் பாகிஸ்தான் உளவு விமானங்கள் பறந்ததாயும், பக்தூனியர் பற்றி இப்போது பாகிஸ்தான் அரசாங்கம் அச்சம் கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்படுறது.

## வியட்னும் சண்டை

சைகோன், செப். 3

தென்வியட்னுமில் நேற்று நடைபெற்ற சண்டையில் 22 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர்.

சென்ற வாரம் அங்கு 200 க்கதிகமான மாலுமித் துருப்புக்கள் கொல்லப்பட்டதாய் நவசீனசெய்திஸ்தாபனம் கூறியது.

டொன்கின் குடாவில் ரடார் நிலையங்களை 3 அமெரிக்க விமானங்கள் தாக்கியதாக அறிவிக்கப்பட்டது.

## பூனுவில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு

பூனு, செப். 3

பூனுவில் தளர்த்தப்பட்டிருந்த ஊரடங்குச்சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இரவு 10 மணி முதல் காலை வரை அது அமுல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது விநாயகர் சிலை ஒன்று மாசுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வகுப்புக் கலவரங்கள் ஆரம்பமாகின.

## "மின்சாரம் இல்லை"

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு மின்சார வெளிச்சம் கொடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்தும் 'மின்சாரம்' இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிகிறது. பூட்டப்பட்ட மோட்டர் பழுதடைந்துவிட்டதால் மின்சார வெளிச்சம் பெறுதல் நீண்டகாலமாக ஸ்தம்பித்துவிட்டது எனவும் அறியப்படுகிறது. வைத்திய அதிபர் இதுபற்றி அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளார் எனவும் தெரிகிறது.

# 15 இந்திய டாங்கிகளும் 150 வீரர்களும் பிடிபட்டனர்

### பலத்த உயிர்ச்சேதம் ஏற்படுத்தியதாய் பாகிஸ்தான் அறிவிப்பு

ராவல்பிண்டி,, செப். 3

சாம்பகுதியில் நடைபெற்ற பலத்த சண்டையில் 15 இந்திய டாங்கிகள் கைப்பற்றப்பட்டதாயும். 150 இந்திய வீரர்கள் சிறைப்படுத்தப்பட்டதாயும், பலத்த உயிர்ச்தேதம் விளைவிக்கப்பட்டதாயும் பாகிஸ்தான் ரேடியோ அறிவித்திருக்கிறது, இந்தியர்கள் இங்கு 7 பட்டாளங்களையும், 1 டாங்கிப்படையையும், 1பீரங்கிப்படையையும் கொண்டுவந்திருப்பதாக அது மேலும் அறிவித்தது.

பிம்பர் பகுதியில் ஒரு இந்திய விமானம்கூட பிரவேசிக்கமுடியாதபடி பாகிஸ்தான் விமானங்கள் தடுத்து வருவதாயும், இப்பகுதியில் வான ஆதிக்கம் தங்களிடமே இருப்பதாயும் அது மேலும் தெரிவித்தது.

பூஞ்ச் பகுதியில் 'விடுதலை வீரர்கள்' பல இந்திய ராணுவ நிலைகளை தாக்கி பலத்த சேதத்தை ஏற்படுத்தினர் என்றும் அது கூறியது.

### ஜோன்ஸன்

வாஷிங்டனில் ஜனதிபதி ஜோன்ஸன் தனது முக்கிய ஆலோசகர்களுடன் காஷ்மீர் நிலைமைபற்றி பரிசீலனை செய்ததாயும், யுதாண்டின் போர்நிறுத்த கோரிக்கைக்கு அவர் ஆதரவு தெரிவித்திருப்பதாயும் கூறப்பட்டது.

### பூட்டோ

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு, பூட்டோ விடுத்துள்ள ஒரு அறிக்கையில் இந்தியாதான் முதலில் எல்லைக்கோட்டைக் கடந்தது என்றும், முதலில் அவர்கள்தான் விமானப்படையை உபயோகித்தார்கள் என்றும் குற்றஞ்சாட்டியிருக்கிருர்.

பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு காஷ்மீர் விஷயத்தில் எதிர்க்கட்சிகள் பூரண ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்திருக்கின்றன.

### பாக். ஆட்சேபனை

பாகிஸ்தான் இந்தியாவுக்கனுப்பியுள்ள ஆட்சேபனைக்குறிப்பில் இந்திய ஜெட்விமானங்கள் [illegible] பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறியதாயும், இதற்கு பதில் நடவடிக்கை எடுக்கும்உரிமையை பாகிஸ்தான் அமுலில் வைத்திருக்கிறதென்றும் கூறியுள்ளது.

இதற்கிடையில் யுதாண்டின் சண்டை நிறுத்த விண்ணப்பத்தை பாகிஸ்தான் பரிசீலித்துக் கொண்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு சபைத் தலைவரான கோல்ட்பர்க், சபை அங்கத்தினர்களுடன் காஷ்மீர் பற்றி தொடர்புகொண்டிருப்பதாகக் கூறப்பட்டது.

## பார்வையாளர் வருவார்

வாஷிங்டன், செப் 3

காஷ்மீர் சண்டையில் பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்திருக்கிறதா என்பதை நேரில் அறியும் பொருட்டு பார்வையாளர் ஒருவரை அமெரிக்கா அனுப்பவிருக்கிறது.

ஐ. நா- அங்கத்துவம்

## 3 நாடுகள் விண்ணப்பம்

நியூயோர்க், செப் 3

சிங்கப்பூர், மாலை தீவு, [illegible] ஐ. நா. வில் அங்கத்துவம் கோரி விண்ணப்பம் செய்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரி சுகததாசா இன்று திருமலைக்கு விஜயம்

திருக்கோணமலை, சனி

தேசியமய சேவைகள், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா இன்று திருக்கோணமலைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

இ. போ. ச. துறைமுகத்தின் அவலநிலைமைகள் குறித்து நேரில் விஜயம் செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு திருக்கோணமலை எம். பி. திரு. மாணிக்கராசா விடுத்த அழைப்பை ஏற்றுத்தான் திருக்கோணமலைக்குத் தாம் விஜயம் செய்வதாக திரு. சுகததாஸா அறிவித்துள்ளார்.

சனிக்கிழமை காலை புகைவிரதம்மூலம் வரும் அமைச்சர் தனது ஒருநாள் விஜயத்தில் இ. போ. ச., துறைமுகம், பெட்ரோலியம் கூட்டுத்தாபனக்கிளை முதலியவற்றை பார்வையிடுவதுடன் கோணேஸ்வராலயத்திற்கும் விஜயம் செய்து வழிபடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. நண்பகல் அமைச்சர் நகரசபைக்கு விஜயம் செய்து நகரசபையின் தேவைகளைக் கேட்டறிவார். பின்னர் அமைச்சர், திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தம் அளிக்கும் மதிய போசனவிருந்தில் கலந்து கொள்வார்.

பிற்பகல் 5 மணியளவில் புயலால் பாதிக்கப்பட்டு மீண்டும் திருத்தப்பட்டுள்ள விளையாட்டரங்கைத்திறந்து வைப்பார். பின்னர் திருக்கோணமலை ம். பி. திரு. மாணிக்கராசாவுடன்பொது மக்கள் சார்பில் அளிக்கும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுவார்.

## சம்பள உயர்வு தந்தால்.....

### தனிச் சிங்களத்தை ஆதரிப்பார்களாம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

தமக்கு சம்பள உயர்வு தந்தால், தாம் தனிச்சிங்கள அமுலுக்கு ஆதரவு தருவதாக புதிய தமிழ் அரசாங்கசேவை ஊழியர்கள் நடாத்திய மகாநாட்டில் கருத்து தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

விவேகானந்த மண்டபத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டுக்கு தலைமை வகித்த மேற்படி ஊழியர் சங்கத் தலைவர் தமிழ் தலைவர்கள் தனிச்சிங்கள அமுல் சம்பந்தமாக அனுஷ்டித்து வரும் மௌனத்திலிருந்து புதிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படித்தே தீரவேண்டும் என்பது புலனாகிறது என கருத்து வெளியிட்டாரெனத் தெரிகிறது.

இந்த மகாநாட்டுக்கு பத்திரிகை நிருபர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

## மீன்பிடிப்பதில் உரிமைத் தகராறு

முல்லைத்தீவு, வெள்ளி

கொக்குளாயிலுள்ள மீன்பிடிப் பாடுகளில் மீன்பிடிக்கும் உரிமை பற்றி பெரிய பிரச்னை எழுந்துள்ளதாகத் தெரிகிறது. இப்பிரச்னை இப்பகுதி மக்களிடத்தே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கைகலப்புகள் போன்ற அமைதியைக் குலைக்கவல்ல அசம்பாவிதங்கள் நிகழுமோ என அஞ்சப்படுவதாகவும் அறியப்படுகிறது.

## இடமாற்றம்

வவனியா, வெள்ளி

வவனியா சுகாதார சேவை அத்தியட்சகராயிருந்து ஓய்வு பெற்ற டாக்டர் கே. சிவஞானரத்தினம் மானிப்பாய் கிரீன் ஆஸ்பத்திரியில் வைத்திய உத்தியோகஸ்தராகப் பொறுப்பேற்றிருக்கிறார். இவர் சிகிச்சை வைத்தியம், பெண்களுக்கு வைத்தியம் ஆகியவற்றில் அனுபவமுடையவர். வண்ணார்பண்ணையில் வைத்தியராய் இருந்த இவரது தந்தை திரு. கனகரத்தினம் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் டாக்டர் கிரீனின் மாணவராய் இருந்தவர்.

## மீண்டும் தலைவர்

சாவகச்சேரி, வெள்ளி

முல்லைத்தீவு கிராமசேவையாளரான திரு. எஸ். பாலசிங்கம் மீண்டும் வவனியா மாவட்ட கிராமசேவையாளர் சங்கத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கிராமசேவையாளர் மாற்றசபைப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஏற்புவலியினால் மரணம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையும் உடுப்பிட்டியைச் சேர்ந்தவருமான தம்பிமுத்து கதிரவேலு (30) என்பவரது காலில் சில நாட்களுக்கு முன் ஆணி குத்தியதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஏற்புவலி காரணமாக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நேற்று காலமானார்.

## சைவ தமிழுலகுக்கு நஷ்டம்

### வைத்தியநாதன் பிரிவுக்கு அனுதாபம்

சுழிபுரம், வெள்ளி

"சிவனொளிபாதமலையைப்போன்ற உன்னதமான கொள்கைகளும், மாணிக்ககங்கை போன்று மாசற்ற தெய்வீகப்பண்புகளும் வாய்த்தவர் சேர். கந்தையா வைத்தியநாதன். உடல் தளர்ச்சியுற்றாலும் வாலிப வீரமும் குழந்தையுள்ளமும் படைத்தவர் அவர். நீதிபதியாய், மாகாணத் தலைவராய், மந்திரியாய் அமர்ந்து மெச்சத்தக்க பணிபுரிந்து, சென்ற 15 ஆண்டுகளாகத் தமது உடல்பொருள்ஆவி அனைத்தையும் திருக்கேதீச்சரத் திருப்பணிக்கு அர்ப்பணித்து ஆன்மீகவாழ்வு நடத்தினார். "திருக்கேதீச்சரம்" என்பதே அவரது மந்திரம். அதனையே சிந்தித்துச்சொல்லிச் செயலாற்றினார். "இவ்வாறு பண்ணாகம் தெற்கு ஸ்ரீமுருகன் சனசமூகநிலையத்தில் நடைபெற்ற அனுதாபக்கூட்டத்திற்கு தலைமைவகித்த பண்டிதர் திரு. அ. ஆறுமுகம் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில், வைத்தியநாதனுடைய மறைவு சைவக் தமிழுலகுக்கு — விசேஷமாகத் திருக்கேதீச்சரத் திருப்பணிக்கு ஈடுசெய்ய முடியாத பெரிய நஷ்டமாகும் என்றும் இந்த நிலைமையிலேயே இந்துக்கள் பலரும் கூடி அத் திருப்பணியை நிறைவேற்றுவதே நாம் அப் பெரியாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் முறை..." என்றும் கூறினார். சங்கக் காரியதரிசி திரு. பொ. ...

## வன்னியசிங்கம் நினைவுவிழா நடத்தமுடிவு

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 17-ம் திகதி அமரர் வன்னியசிங்கத்தின் நினைவுதினத்தை விழாவாகக் கொண்டாட இணுவில் ஸ்ரீசிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தினர் முடிவுசெய்துள்ளனர்.

நிலையத் தலைவர் திரு. செ. இலகுநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நிலையப் பாதுகாப்புச்சபைத்தலைவர் திரு. வ. நாகலிங்கம் பேசுகையில் தற்போது சனசமூக நிலையங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் நிதி உதவி போதாதென்றும் மேலதிக நிதிஉதவியை அரசாங்கம் அளிக்க முன்வர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திரு. ம. பரமநாதன் பேசுகையில் மறைந்த தலைவர் திரு. வன்னியசிங்கத்துக்கு விழா எடுப்பது அவசியம் என்பதை சுட்டிக் காட்டினார்.

## குதிரைப் பந்தயத்திடலை பாரமேற்க நடவடிக்கை

கொழும்பு, சனி

குதிரைப் பந்தயத்திடலையும் கட்டடத்தையும் பாரமேற்பது சம்பந்தமாக இலங்கை டேர்ப் கிளப்புடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குதிரைப்பந்தய திடல் 99 வருட குத்தகைக்கு டேர்ப் கிளப்பிற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

## 20 ஆயிரம் நஷ்டஈடு

1961-ம் ஆண்டு இ. போ. ச. பஸ் வண்டியினால் மோதப்பட்டு உயிர் துறந்த ஒருவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடாக இலங்கை போக்குவரத்துச்சபை 20 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

டாக்டர் ஆலோசனை கூறினார். ஆஸ்பத்திரியில் கட்டில் தட்டுப்பாடு ஏற்படுமென்று பயந்தேன். அவசரமாகச் சிகிச்சையளிக்கப்படவேண்டிய நோயாளிகள் அதிகமாகும்போது, எனது மனைவியை நிலத்தில் படுக்கும்படி கேட்கப்படுவாரெனக் கருதினேன். அதனால் வீட்டிற்கு அழைத்துச் சென்றேன்.

முதலாந் தேதி குழந்தைக்குச் காய்ச்சல் ஏற்பட்டது. அதோடு பால் அருந்தவும் மறுத்தது. மீண்டும் குழந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தேன். அங்கு அனுமதிக்கப்பட்ட பின் குழந்தை மரணமானது.

டாக்டர் பரமதாசன் சாட்சியமளிக்கையில் குழந்தை ஏற்பினால் மரணமானதெனத் தெரிவித்தார்.

இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி குழந்தையின் தந்தையைக் கடுமையாகக் கண்டித்தார்.

தந்தையின் மடத்தனசெயலினால்தான் குழந்தை மரணமானதென்றும், குழந்தை ஆஸ்பத்திரியில் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் பிழைத்திருக்குமென்றும், படித்தவர்கள் இம்மாதிரி நடந்துகொண்டால், பாமரமக்களிடமிருந்து எதனை எதிர்பார்க்கமுடியுமென்றும் மரணவிசாரணை அதிகாரி தெரிவித்தார்.

ஜெகநாதனும் பேசினார். அனுதாபத்தீர்மானம் திரு ... அனுப்பிவைக்கப்பட்டது.

# பிணையில் சென்ற இருவருக்கு மீண்டும் விளக்கமறியல்

## கொலை வழக்கில் மாஜிஸ்திரேட் உத்தரவு

யாழ்ப்பாணம், வெள்ளி

இடைக்காட்டைச் சேர்ந்த செல்லப்பா சின்னையா என்பவரின் கொலை சம்பந்தமானவழக்கு இன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஜீ. எப். ஏச். அத்துறுபாண முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபொழுது சென்ற தவணை 1000/- ரூபா பிணையில் சென்ற இருவரை மீண்டும் விளக்க மறியலில் வைக்க வேண்டுமென மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

ஆரம்பத்தில்விளக்கமறியலில் வைக்கப்பட்ட மூவராகிய முருகன் கிருஷ்ணன், சடையன் ஆண்டி, கார்த்திகேசு சுப்பிரமணியம் ஆகியோருள் கிருஷ்ணனும், ஆண்டியும் சென்ற தவணையில் அவர்களுக்கெதிராகப் போதியசாட்சியமில்லாத காரணத்தால் தலா ரூபா 1000/- பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் நேற்றுப் பொலிசாரால் கொண்டு வரப்பட்ட புதிய தகவல்கள் காரணமாக நீதிபதி அவ்விருவரையும் மீண்டும் விளக்கமறியலில் இருக்கக் கட்டளையிட்டனர். அத்துடன் இடைக்காட்டைச் சேர்ந்த முருகேசு கந்தசாமி, சின்னத்துரை கணபதிப்பிள்ளை ஆகிய இருவரையும் உடனடியாகக் கைதுசெய்ய மாஜிஸ்டிரேட் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வழக்கு மேல் விசாரணைக்காக இம்மாதம் 9-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# டாக்டரின் ஆலோசனையை மீறியதால் குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், சனி

தாயையும், குழந்தையையும் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு கொண்டுசெல்ல வேண்டாமென்று டாக்டர் கூறிய ஆலோசனையையும் நிராகரித்து வீட்டிற்குக் கொண்டுசென்றதால், குழந்தைக்கு ஏற்பு உண்டாகி, மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதித்தபோது, குழந்தை மரணமான சம்பவம் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பி. இராமலிங்கத்தின் (6 நாள்) குழந்தையான திருக்கேதீஸ்வர நாதனின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாண நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம்மரண விசாரணை நடத்தியபோது காலஞ்சென்ற குழந்தையின் தந்தையான இராமலிங்கம் கூறியதாவது: "எனது மனைவியைப் பிரசவத்திற்காக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தேன். 30ந் தேதியன்று எனது விருப்பப்படி குழந்தையையும், தாயையும் வீட்டிற்குச் கூட்டிச் சென்றேன். தாயையும், குழந்தையையும் கூட்டிச் செல்லவேண்டா... மென்று

(3-ம் கலம்பார்க்க)

REGAL--JAFFNA
NOW SHOWING!
Laurence Harvey
Frank Sinatra
in
THE MANCHURIAN CANDIDATE

இப்பொழுது திரையிடப்படுகிறது !
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 10-30
சனி ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்
கைகொடுத்த தெய்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)
ஆறறிவு படைத்த மனிதன் தன்னினத்தைச் சாரநதவனையே மிருகமாக்கத் துணியும் போது எழும் உரிமைக் குரல்தான் — "நானும் மனிதன்தான்"
விஜயபுரி வீரன் புகழ் ஆனந்தன்-சந்திரகாந்தா
பாண்டி செல்வராஜ், ஷீலாதேவி, அசோகன், நாகேஷ்
கண்ணன், ஓ. ஏ. கே. [தேவர்] நடிக்கும்
ஆனந்த மூவிஸ்
நானும் மனிதன்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அறிவித்தல்
**சாவகச்சேரி டிஸ்திறிக் கோடு**

இல. 2958/8.

சதாசிவம் சரவணமுத்து, சங்கத்தானை, சாவகச்சேரி, வழக்காளி.

VS

1. வாரித்தம்பி கைம்பெண் தையல்நாயகம்,
2. வேலுப்பிள்ளை கோவிந்த பிள்ளை, சங்கத்தானை, சாவகச்சேரி.

எதிராளிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி, சாவகச்சேரி கோயிற்பற்று, சாவகச்சேரி இறை குடியிருந்த வளவு, காக்கையன் வளவு, விளாத்தியடி என்னும் பெயர்களையுடையதும், நிலப்பரப்பு, 18 1/2 கொண்டதும், ஆனல் ஆட்சிப்படி நிலப்பரப்பு 20 உடையதுமான காணியை பிரிவிடுதல் செய்வதற்கு மேற்கூறிய வழக்காளி மேற்படி இலக்கத்தில் ஒரு பிரிவிடுதல் வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறர் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. அக்காணியின் எல்லைகள் பின்வருமாறு:

கிழக்கு- ஒழுங்கை

வடக்கு. விசாகப் பெருமாள் கைம்பெண் தெய்வானைக்கு உரிய ஆதனம்.

மேற்கு- நடராசா பெண் பராசத்துக்கும் ஞானமூர்த்தி முருகேசுவுக்கும் உரிய ஆதனங்கள்.

தெற்கு-சபாரத்தின ஐயர் தியாகராசா ஐயரின் சிறுபிள்ளைகளுக்கு உரிய ஆதனம்.

இக்காணியை 1965, ஏப்ரல் 30-ம் திகதி உலாந்தா கே. ஐயாறு - அவர்களால் அளந்து 430-ம் இலக்க படத்தில் விவரிக்கப்பட்டுள்ளது,

இவ்வழக்கு 1965, செப்டம்பர் 30-ம் திகதி மேற்படி கோட்டில் கூப்பிடப்படும்.

1965 ஓகஸ்ட் 26
கோட்டுக் கட்டளைப்படி
செ. சடாச்சரம்
(செயலாளருக்காக)

தயாரித்தவர்,
வே. கனகசபை
வழக்காளியின் புறக்டர்.
26-8-65. 821

## ஊர்காவற்றுறைப் பட்டின சபை
## கேள்வி விளம்பரம்

1965-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15-ந் திகதி பிற்பகல் 3-00 மணிவரை பின்வரும் வேலைகளுக்கு சீல்வைத்த கேள்விகள் அவற்றுக்கென வழங்கப்படும் பத்திரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. அடப்பனர் ஒழுங்கைக்குக் கற்கள் பரவித்தார் போடுதல் 250 அடி.

2. நெச்சட்டா வீதிக்குக் கற்கள் பரவித் தார் போடுதல் 250 அடி.

3. கதிரேசன் கோவில் வீதிக்குத் தார் போடுதல் 500 அடி.

4. அயித்தாம்புலம் வீதிக்குத் தார் போடுதல் 500 அடி.

5. பீச்ரேட்டில் ஐறிஸ்கான் அமைத்தல்,

ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 10-ம், பத்திரத்திற்கு ரூபா 2-ம் கட்டிப் பத்திரங்கள் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வே. சிவசம்பு,**
தலைவர்,
பட்டின சபை,
ஊர்காவற்றுறை.
1-9-65. 838




# "விளையாட்டுப் பயிற்சி விவசாயத்துறைக்கு வழிகாட்டி"
## பருத்தித்துறை எம். பி. பேச்சு

உடுப்பிட்டி, வெள்ளி

"விளையாட்டுத்துறையில் இக்கால இளைஞர்கள் போதிய ஆர்வம் காட்டுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். ந்த ஒரு வாலிபனுக்கும்சிறந்த உடற்கட்டு அவசியம். விளையாட்டுக்களின் மூலம் உடலைப் பதப்படுத்தி வைத்திருப்பவர்களால் எந்தக் கடினமான வேலையையும் இலகுவாகச்செய்யமுடிகிறது. விவசாயத் தொழிலை இளைஞர்கள் விரும்புவதற்கான சூழ்நிலையையும் விளையாட்டுப் பயிற்சி ஏற்படுத்திவிடுகிறது" இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் வல்வெட்டி கிழக்கு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 3-வது வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை பற்றி திரு. துரைரத்தினம் மேலும் கூறியதாவது:-

"பல்லாயிரக்கணக்கில் வேலையற்றோரின் தொகை அதிகரித்துள்ளது. முந்திய அரசைவிட இன்றைய தேசீய அரசாங்கம் மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதில்கூடியசிரத்தை எடுத்துவருகிறது. இருப்பினும் பிரச்னை முற்றாகத் தீருமென எதிர்பார்க்க முடியாது. எதற்கும் படித்த இளைஞர்களும் பெண்களும் வேறு வேறு துறைகளில் சிறிய உத்தியோகங்களாயினும் அவற்றைத் தேடிக்கொள்வதே புத்திசாலித்தனமாகும்."

கழகக் காப்பாளர் திரு. க. சின்னத்தம்பியும் பேசினர். பச்சை, சிவப்பு ஆகிய இல்லங்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் பச்சை 144 புள்ளிகளையும், சிவப்பு 141 புள்ளிகளையும் பெற்றன. 40




## கொழும்பு
### சனி 4-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 சங்கீதக்கச்சேரி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 உரைச் சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 5-9-65

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 தமிழோடிசை, 8-00 பௌத்தாஞ்சலி, 8-15 தமிழ் மூலம் சிங்களம்,

344 மீற்றர் & 49 மீற்றர்
8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 படப்பாட்டுக்கள், 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைஇசை.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 நேயர்கடிதங்கள், 7-00 பாட்டு. 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-00 நேயர்விருப்பம், 9-15 மனைவிளக்கு — மாதர்நிகழ்ச்சி, 9-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்த இசை.

## திருச்சி
### சனி 4-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, மாலை 6-05 இரவு 7-15)

319·1 மீ (940 கி, ஸை)
காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 வயலின்.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 1-50 மெல்லிசை, 2-10 வயலின்.

மாலை 5-00 திரைப்பட இசை, 5-30 மாதர் அரங்கம், 6-00 அறிவிப்புகள்.

இரவு6-15செய்திக்குறிப்புகள், 6-20 இசைமஞ்சலி, 6-35 ஊர்ச்சாவடி, 6-40 பொதுநோக்கு, 6-45 பொதுமேடை, 7-00 நாட்டுப்பாடல்பயிற்சி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 வாத்தியஇசை, 8-15 நூல் மதிப்புரை, 8-45 மெல்லிசை, 9-15இவரைச் சந்திப்போம், 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

### ஞாயிறு 5-9-65

319·1 மீ (940 கி. ஸை)
காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 எம். எம். மாரியப்பா — பாட்டு, 8-15 விமலா கிருஷ்ணமூர்த்தி — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூர்யகாந்தி — கதம்பநிகழ்ச்சி. 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 மஞ்சரி — நாடகம்.

மாலை 4-00 டி. கே. ஜயராமன் பாட்டு, 5-00 எம். எம். மாரியப்பா — பாட்டு. 5-30 சிறுவர் அரங்கம், 5-50 வாத்தியஇசை.

இரவு 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 இசை மஞ்சரி, 6-35 கவி அரங்கம், 7-00 கதம்பம், 7-30 நம் [illegible], 8-15 தபால்பெட்டி, 8-45 இசை மாலை, 10-00 இசைக் கோவை.

# வரி விளம்பரம்

## அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகவிஞ்ஞாபனம்

புளியங்குளம் புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் கோவில் புராதனமாய் உள்ள அவ்வாலயத்தை புதிதாய் திருப்பணி வேலைகள் செய்து நிகழும் விசுவாவசு வருடம் ஆவணி மாதம் (8-9-65) 23-ம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு வரும் சிம்மலக்கினத்தில் ஸ்ரீ நாகதம்பிரானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதால் அன்பர்கள் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று ஸ்ரீநாகதம்பிரானின் திருவருளைப் பெறுமாறு வேண்டிக் கொள்கின்றேம்.

இங்ஙனம் கோவில் பாரம்பரை பூசகர், ஆ. வல்லிபுரம், இ. குமரையா, த. ராசையா, கா. பரராசசிங்கம். 981

## வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

வயதுக்கு மேற்பட்ட ஆண்களின் ஓலை கிழித்தல் போட்டியில் அக்கிராமத்தைச் சேர்ந்த திரு. வே. சின்னத்துரையும் பார்வையாளராக வந்த பெண்களின் சங்கீதக் கதிரைப் போட்டியில் செல்வி வ. இராஜினிதேவியும் பகிரங்க ஒரு மைல் ஓட்டத்தில் செல்வன் கே. சண்முகதாசும் (வல்வெட்டி) கயிறிழுத்தல் போட்டியில் திருஞானம் கோஷ்டியும் வெற்றியீட்டினர்.

வெற்றி வீரர்களுக்கு திரு. க. துரைரத்தினம் எம். பி. பரிசில்களை வழங்கினர். கழகச் செயலாளர் திரு. சு. தேவதாஸ் நன்றி கூறினர்.

## சிவப்பு இல்லம் வெற்றி

குரும்பசிட்டி, வெள்ளி

குப்பிழான் சனசமூக நிலைய விக்னேஸ்வர விளையாட்டுக்கழக வருடாந்த இல்லங்களின் விளையாட்டுப் போட்டி பைங்கிலிட்டி மைதானத்தில் நடைபெற்றபோது சிவப்புஇல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று சாம்பியன் கோஷ்டியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. பச்சை இல்லம் நீல இல்லம் ஆகியன முறையே இரண்டாம் மூன்றும் ஸ்தானங்களைப் பெற்றுக்கொண்டன. இவ்விளையாட்டுப் போட்டியினை ஏழாலை கிராம சபைத்தலைவர் திரு சி. செலவநாயகம் சனசமூக நிலையக் கொடியினை மைதானத்தில் கம்பமொன்றில் ஏற்றிவைத்து ஆரம்பித்துவைத்தார்.

உடுவில் எம். பி, திரு. வி. தர்மலிங்கம் போட்டியின் போது பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் "விளையாட்டுக்கள் மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணம், ஒற்றுமை, சகிப்புத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்த பெரிதும் உதவுகின்றன. தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளதால் தமிழ் மக்களின் விளையாட்டுத் தரம் உயர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன யாழ். நகரில் விளையாட்டு அரங்கினை நிர்மாணித்ததன் மூலம் தேசிய அரசாங்க விளையாட்டுப் பகுதி அமைச்சர் தமிழ் பகுதி மக்களுக்கு விசேஷ சலுகைகள் வழங்கியுள்ளார்" என்று குறிப்பிட்டார்.

## கல்வி

எமது மாலை நேர வகுப்புகள், பாடசாலை 3 தவணை விடுமுறை வகுப்புகளிற் சேரத்தவறியவர்களின் வேண்டுகோளின்படி புதிய வாரவிடுமுறைப் பகல் வகுப்புகள் (சனி, ஞாயிறு அல்லது புதிய திட்டப்படி 2 போயா விடுதலை நாட்களில் மாத்திரம் தொடர்ந்து நடைபெறுவது) B A; B.Sc, General & Special B. L; B com G A Q, G S Q G C E; (A/L & O/L- Arts & Science-) பரீட்சைகளுக்கு 4-9-65-ல் வடபிரதேச பல்கலைக் கல்விக் கழகத்தில் ஆரம்பமாகும். விடுதி விஞ்ஞான ஆய்கூட வசதிகள் உண்டு. திறமையும் அனுபவமும் இலங்கைச் சர்வகலாசாலையில் விரிவுரை ஆற்றிய ஆற்றலுமிக்க ஆசிரியர்களால் எல்லாப் பாடங்களும் ஒழுங்காகப் போதிக்கப்படுகின்றன. Special Rapid Revision course covering entire Syllabus- G. C. E. (A/L & O/L Arts & science), December 965 Examination வகுப்புகளும் ஒழுங்காகநடைபெறுகின்றன. கா. க. காசிப்பிள்ளை, பொதுக்காரியதரிசி, N. R. T. A., இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். 963

சிறு பிள்ளைகளுக்குரிய தமிழ், ஆங்கில வகுப்புகள் 1-ம் திகதி தொடக்கம் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாகச் சேர விரும்புவோர் இக்கிழமை தொடக்கம் சேரலாம். சிங்கள வகுப்பு வளர்ந்தவர்களுக்கு நேர வசதிகளுக்கேற்ப நடத்தப்படும். சரஸ்வதி வித்தியாலயம், 247, பருத்தித்துறை வீதி, சங்கிலித்தோப்பு, நல்லூர். 958

சுருக்கெழுத்து, தட்டெழுத்து தமிழில், ஆங்கிலத்தில். சிங்களம், ஆங்கிலம். ஜி. சி. இ. சாதாரணம் கலை, விஞ்ஞானம், வர்த்தகம். காலை மாலை வகுப்புகள். தமிழ் சுருக்கெழுத்து புத்தகங்கள் பெற்றுக்கொள்ளலாம். யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரேட், யாழ்ப்பாணம். பெண்கள் கிளை— 29, பருத்தித்துறை ரேட், யாழ்ப்பாணம். 982

## தேவை

தராதரம்பெற்ற அனுபவமுள்ள மருத்துவமாது தேவை. விளம்பரஇல: 964, ஈழநாடு, மேற்பார்த்து. 964

## விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

அளவெட்டி வடக்கு கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: நாகரட்ணம் பத்மநாதன், கோண்டாவில் கிழக்கு. 960

## ஹொக்கி விளையாட்டை ஊக்குவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் ஹொக்கி விளையாட்டை முன்னேற்றுவதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்வதற்காக புதிய ஒரு மத்தியஸ்தர்கள் சங்கமொன்றை இம்மாதம் 10-ந் திகதி யாழ் மத்திய கல்லூரியில் ஹொக்கி விளையாட்டில் ஆர்வமுள்ளவர்கள் கூட்ட இருக்கிறர்கள்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமானத் தாக்குதல் நீடிக்கிறது

## அமெரிக்க ஜெட் விமானங்களை பாகிஸ்தான் உபயோகித்தது

புதுடில்லி, செப். 2

இந்திய விமானப்படை விமானங்கள் இன்று காலையில் சாம் பகுதியில் மீண்டும் பாகிஸ்தான் துருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தி பாகிஸ்தான் படைகளினுல் உபயோகிக்கப் பட்ட 40கனரக வண்டிகளை நாசமாக்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சண்டை நீடிக்கிற தென்றும் உயிர்ச் சேதம் அதிகமென்றும் கடைகியாகக் கிடைத்த செய்திகள் கூறு கின்றன.

தாக்குதல் நடத்திய இந்திய விமானங்கள் பத்திரமபகத் திரும்பி விட்டன என்று அறிவிக் கப்பட்டது.

பாகிஸதானியர் இன்று அமெரிக்க ஜெட் விமானங்களினுல் தாக்குதல்கள் நடத்தியிருந்தனர்.

## டாக்டர் நாகநாதன் இலங்கை திரும்பினர்

இரத்மலானை, வியா.

நல்லூர்த் தொகுதி எம். பி. டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் இன்று பிற்பகல் ''ஏர் இந்தியா'' விமானம் மார்க்கமாக கொழும்பு திரும்பினுர். அவரை வரவேற்பதற்காக உறவினர்களும், கட்சிப்பிரமுகர்களும், எம். பிக்களும் மற்றும் பலரும் விமான நிலையத்தில் குழுமி நின்றனர்.

டாக்டர் நாகநாதன் மிகவும் தெம்புடன் காட்சியளித்தார். சிரித்த முகத்துடன் அவர் விமானத்திலிருந்து இறங்கியதும் அவரின் வரவுக்காகக் காத்து நின்றவர்கள் எதிர்கொண்டு அவரை அழைத்தனர்.

தமது வாசஸ்தலத்தை அவர் அடைந்ததும் பலர் நேரில் சென்று சுகம் விசாரித்தனர்.

## புதிய தெம்புடன் தாயகம் வந்துள்ளேன்

### ''ஈழநாடு'' நிருபருக்கு விசேஷபேட்டி

கொள்ளுப்பிட்டி, வியா.

''இப்பொழுது நான் பூரண சுகத்துடன் தாயகம் திரும்பியிருக்கிறேன். இருதய நோய் காரணமாக சிகிச்சை பெற லண்டன் சென்றிருந்த எனக்கு இப்பொழுது அந்த வியாதியில் பூரண சுகம் ஏற்பட்டிருப்பதுடன் என்னைப் பீடிக்கவிருந்த வேறு சில நோய்களுக்கும் சுகம் கண்டிருக்கின்றேன். எனக்கு இப்பொழுது இருதயநோய் இல்லை கண்பார்வை நன்ருக இருக்கிறது. இரத்த ஓட்டம் சிறப்பாக இருக்கிறது. சுருங்கச் சொல்லப் போனுல் நான் புதிய தெம்புடன் தாயகம் திரும்பியிருக்கின்றேன்''

இன்று பகல் தாயகம் திரும்பிய நல்லூர்த் தொகுதி எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ''ஈழநாடு'' நிருபருக்கு இன்று அளித்த விசேஷ பேட்டியொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



''சுகயீனம் காரணமாக லண்டனில்சுமார் நான்கு மாத காலம் நான் சிகிச்சை பெற்றேன். இருதய நோயினுல் பாதிக்கப்பட்ட எனக்கு சத்திரசிகிச்சை அளிக்கப்படும் என்று எதிர்பார்த்த பொழுதிலும் அப்படி ஒன்றுமே நிகழவில்லை. வைத்திய நிபுணர்களின் மருந்துகள் மூலமாக எனக்கு பூரணசுகம் ஏற்பட்டிருக்கிறது'' என்றும் டாக்டர் நாகநாதன் தெரிவித்தார்.

''இலங்கையின் பிரச்னைகள் குறித்து நீங்கள் லண்டனில் யாருடனும் கதைத்தீர்களா? யாரைச் சந்தித்திருந்தீர்களா?'' என்று ''ஈழநாடு'' நிருபர் கேட்ட பொழுது டாக்டர் நாகநாதன் கூறியதாவது.

''பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸன், பிரிட்டிஷ் மந்திரிகள், எம். பிக்கள் முக்கிய பிரமுகர்கள் ஆகியோரை நான் சந்தித்திருந்தேன். இலங்கையின் பல்வேறு பிரச்னைகள் குறித்து இவர்களுடன் கதைத்தேன். வரும் வழியில் ஜெனிவாவிலும் பல வெளிநாட்டு உயர் தலைவர்களைச் சந்தித்து அளவளாவினேன்''

நல்லூர்த் தொகுதி வாக்காளர்களுக்கு ஏதும் சொல்ல விரும்புகிறீர்களா? என்று நமது நிருபர் கேட்ட பொழுது; ''நான் அவர்களைக் காண ஆவல் கொண்டிருக்கின்றேன். நான் சாகவில்லை. புதிய பலம் வாய்ந்த மனிதனுக வந்திருக்கிறேன். என்று கூறினுர்.

## கோண்டாவிலுக்கு தனிக்கிராமச்சபை வேண்டும்

கோண்டாவில், வியா.

அண்மையில் கோண்டாவில் மத்திய சந்தைக்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தில் தலைவர் சு. சற்குணநாதன் தலைமையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியின் கூட்டம் நடைபெற்றது.

சேர். கந்தையாவைத்திய நாதன் மறைவு குறித்து அன்னுரின் குடும்பத்திற்கு அனுதாபச் செய்தி அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஐ. நா. சபை சென்றுள்ள காங்கிரஸ் தலைவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கோண்டாவில் 12-ம் வட்டார செருக்கப்புல வெள்ள வாய்க்கால் விஷயத்தில் கி. ச. தலைவர் கவனியாததையிட்டு கண்டனத் தீர்மானம் ஒன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கொக்குவில் கிராமசபையினின்றும் கோண்டாவில் பகுதியை பிரித்து ஒரு தனி கிராமசபை அமைத்துத் தரும்படி கி. ச. தலைவர், ஆணையாளர், மந்திரி முதலியோரை வற்புறுத்துவது என்றும் கோண்டாவிலில் உள்ள வெண்காய உற்பத்தியாளர்களுக்கு பண உதவி புரியும்படி மேல் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## சரவணை கத்திக்குத்து வழக்கு

### 16-ம் திகதி தீர்ப்பு

ஊர்காவற்றுறை, வியா.

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த செல்லப்பா குணரத்தினம், செல்லையா சிவபாத சுந்தரம் ஆகிய இருவரையும் கத்தியால் குத்தி காயபடுத்தியதாக அதே இடத்தில் வசிக்கும் மண்டைதீவைச் சேர்ந்த எஸ். தியாகராசாமீது தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிபதி திரு ரி. ஜே. இராசரத்தினம் தீர்ப்புக் கூறுவதை இம் மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரியை இம்மாதம் 16ம் திகதிவரை விளக்க மறியலில் வைத்திருக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். எதிரி தரப்பில் புரக்டர் திரு எஸ். ஸி. கதிரவேலு ஆஜரானுர். வழக்காளி சார்பில் புரக்டர் [illegible] அட்வக்கேட் திரு கணேசலிங்கம் இந்த வழக்கில் ஆஜரானுர்.

## மகளின் பிரிவு தாங்காது தாய் தற்கொ

### ''மகளே எனக்கு யமனுகிவிட்டாள்''

யாழ்ப்பாணம், வெள்ளி

தனது ஒரே மகள் தம்மை விட்டுப் பிரிந்து ஒரு இளைஞனுடன் சென்று வாழ்ந்ததைக் கண்டு மனமுடைந்து வாழ்வில் விரக்தியுற்று நித்திரை மாத்திரைகளை உட்கொண்டு ஒரு தாய் தற்கொலை செய்துள்ளார்.

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய ஓவசியர் திரு. கனகசபை பொன்னம்பலத்தின் மனைவி பகவதி அம்மாவின் மரணம் குறித்து யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் நடத்திய மரண விசாரணையின் போது மேற்கூறிய விபரம் தெரிய வந்தது.

காலம் சென்றவரின் கணவர் திரு. கனகசபை பொன்னம்பலம் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

''காலஞ் சென்றவரை நான் 1943-ம் ஆண்டில் விவாகம் செய்தேன். எமக்கு ஒரே ஒருமகள் (18 வயது) உண்டு. சில நாட்களுக்கு முன் அவர் சிவானந்தசாமி என்ற வாலிபனுடன் எமக்குத் தெரியாது ஓடி விட்டார். அந்நாள் தொடக்கம் எனது மனைவி மிகவும் மனமுடைந்திருந்தார். நான் நரம்புத் தளர்ச்சியினுல் வருந்திக் கொண்டிருந்தேன். அதனுல் நான் நாளாந்தமாக நித்திரை மாத்திரை உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. சம்பவம் நடந்ததினம் காலஞ் சென்றவர் வழமையான நேரத்திற்கு நித்திரை விட்டு எழாத காரணத்தால் நான் அவரை எழுப்பினேன். மிகக் கஷ்டப்பட்டு விழித்த அவர் அன்றிரவு நித்திரை வராத காரணத்தால் சில நித்திரை மாத்திரைகள் உட்கொண்டதாகச் சொன்னுர். உடனே மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். அவர் அங்கு மரணமானுர்.

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த ஆஸ்பத்திரி டாக்டர் சி.டி.ஆர். இரத்தினம் சாட்சியமளிக்கும் போது காலஞ்சென்றவர் அளவுக்கு மிஞ்சிய 'மெலெரில்' என்ற நித்திரை மாத்திரைகளை உட்கொண்டபடியால் காலமானுரென்னுர்.

காலஞ்சென்றவரின் கடிதங்கள் இரண்டு மரணவிசாரணை அதிகாரிமுன் சமர்ப்பிக்கப்பட்டன. ஒரு கடிதம் கூறுவதாவது;-

''என்னை ஒருவரும் ஒன்றும் செய்ய வேண்டாம். எனது உயிரை நானே மாய்த்துக் கொள்கிறேன். எனது ஒரே ஒரு பிள்ளையே எனது யமனுக வந்துள்ளார். அது நான் செய்த பாவ பலன்''

இரண்டாவதுகடிதம் காலஞ்சென்றவரின் மூத்த தம்பியாருக்கு எழுதுதப்பட்டது. அதில் குறிப்பிட்டுள்ளதாவது:-

உனது அக்கா ஒரு பிள்ளை பெற்றிருந்ததென்று நினைவில் வைத்துக் கொள்ள வேண்டாம். கனவிலும் அதை நினைக்க வேண்டாம். அவளுக்கு ஒருசெம்புச் சல்லியோ ஒரு ஓட்டைச்சட்டியோ கொடுக்கவோ சேரவோ விடவேண்டாம். அவளேஎனக்கு யமனுக இருந்தாள். அவளை எனதுபிள்ளை என்று சொல்ல நான் வாழ்ந்திருப்பதைவிட நான் இறப்பதே மேல் என்பதால் நான் எனது உயிரை மாய்த்துக் கொள்கிறேன்''

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## அடுத்த வாரம் இங்கு வருகிறுர்

யாழ்ப்பாணம், வெள்ளி

டாக்டர் ஈ.எம். வி. நாகநாதன் அடுத்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு வருவார்.

நேற்று பகல் வந்து சேர்ந்த அவர் இன்று பார்லிமெண்ட் கூட்டத்துக்கு சமுகமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கழுத்து திருகப்பட்டு மாண்ட குழந்தை

சாவகச்சேரி, வியாழன்

கிளிநொச்சி குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த 4ம் யூனிற் வாசியான ஆர். செல்லம்மாவின் 9 மாதக் குழந்தை விக்னேஸ்வரன் கழுத்து திருகப்பட்ட நிலையில் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது மரணமானுர்.

இந்த மரண சம்பந்தமாக கிளிநொச்சிப் பொலிசார் து. இராசம்மா என்ற பெண்ணைச் சந்தேகத்தின் மீது கைதுசெய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## தேசிய சுவீப்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா 282-62 கொண்ட 100 ஆறுதல் பரிசுடிக்கட் இலக்கங்கள் பின்வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | H | 0671 | 14 | T | 0239 |
| 08 | Q | 0649 | 11 | S | 0806 |
| 09 | T | 0647 | 03 | B | 0624 |
| 10 | P | 0403 | 23 | Z | 0011 |
| 21 | V | 0505 | 14 | B | 0049 |
| 02 | G | 0568 | 10 | L | 0713 |
| 01 | O | 0866 | 18 | D | 0865 |
| 12 | U | 0108 | 11 | S | 0372 |
| 06 | O | 0031 | 04 | B | 0987 |
| 10 | P | 0944 | 23 | E | 0345 |
| 17 | O | 0556 | 22 | S | 0596 |
| 06 | K | 0115 | 10 | S | 0822 |
| 01 | A | 0939 | 10 | U | 0575 |
| 07 | V | 0931 | 09 | G | 0594 |
| 15 | W | 0361 | 19 | O | 0139 |
| 04 | M | 0695 | 10 | [illegible] | 0799 |
| 11 | R | 0090 | 15 | P | 0022 |
| 20 | O | 0211 | 16 | S | 0938 |
| 02 | Y | 0289 | 22 | Y | 0280 |
| 21 | J | 0804 | 15 | F | 0710 |
| 18 | J | 0705 | 05 | N | 0519 |
| 14 | M | 0988 | 13 | O | 0709 |
| 01 | H | 0155 | 09 | L | 0376 |
| 16 | V | 0977 | 04 | E | 0431 |
| 13 | M | 0499 | 11 | E | 0783 |
| 11 | D | 0410 | 14 | T | 0768 |
| 22 | D | 0239 | 20 | F | 0822 |
| 18 | F | 0058 | 07 | C | 0014 |
| 21 | H | 0666 | 13 | R | 0644 |
| 13 | R | 0844 | 02 | R | 0182 |
| 21 | Y | 0965 | 23 | G | 0478 |
| 08 | C | 0269 | 05 | C | 0174 |
| 15 | C | 0340 | 04 | K | 0020 |
| 08 | T | 0478 | 11 | P | 0542 |
| 16 | Z | 0600 | 12 | Q | 0084 |
| 21 | C | 0592 | 10 | X | 0275 |
| 12 | J | 0107 | 03 | Q | 0819 |
| 08 | B | 0539 | 15 | D | 0365 |
| 18 | Q | 0674 | 22 | G | 0106 |
| 16 | K | 0818 | 18 | A | 0772 |
| 01 | R | 0487 | 21 | Z | 0257 |
| 08 | G | 0775 | 12 | G | 0490 |
| 21 | E | 0903 | 14 | G | 0853 |
| 15 | T | 0600 | 04 | X | 0565 |
| 12 | Z | 0872 | 19 | E | 0150 |
| 12 | L | 0425 | 03 | P | 0217 |
| 04 | Z | 0828 | 01 | M | 0986 |
| 11 | L | 0809 | 08 | B | 0697 |
| 05 | V | 0191 | 10 | P | 0192 |
| 10 | Q | 0667 | 05 | A | 0708 |

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாத 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org